TATA ETHICAL FUND
(An Open-ended Equity Scheme)

TATA MUTUAL FUND
Expertise that's trusted



# ‘‘எப்படி சம்பாதிக்கிறேன் என்பது எவ்வளவு சம்பாதிக்கிறேன் என்பதைப்போல எனக்கு முக்கியம்.’’

இவற்றை விரும்பும் முதலீட்டாளர்களுக்கு ஏற்ற புராடெக்ட்#:

- நீண்ட கால முதலீட்டு மதிப்பு அதிகரித்தல்
- ஷரியா அறநெறிகளுக்கு இணக்கமான நிறுவனங்களின் மூலதனப் பங்குகளிலும் அதனைச் சார்ந்த ஆவணங்களிலும், மற்றும் ஷரியா அறநெறிகள் அனுமதிக்கும் இதர பிர ஆவணங்களிலும் சொத்துகள் முதலீடு செய்யப்படும்
- இது **மிக அபாய** ■ **(பழுப்பு)** திட்டம் என்று கருதப்படும். தங்கள் முதலீடு மிகை அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்

**# சந்தேகம் தோன்றும் பட்சத்தில், இத் திட்டம் அவர்களுக்கு ஏற்றதுதானா என்பதை தங்கள் நிதி ஆலோசகர்களிடம் முதலீட்டாளர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.**

**கவனிக்கவும்:** அபாயங்கள் இவ்வாறாக வகை படுத்தப்பட்டிருக்கின்றன:



(பழுப்பு) தங்கள் முதலீடு மிகை அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.



(மஞ்சள்) தங்கள் முதலீடு மிதமான அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.



(நீலம்) தங்கள் முதலீடு குறைந்த அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பரஸ்பர நிதி முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, முதலீடு செய்யும் முன்னர் திட்ட ஆவணங்களைக் கவனமாகப் படிக்கவும்.

## முதலீடு தத்துவம்

டாடா எதிக்கல் பண்டு ஒரு பன்முக மூலதனப் பங்குகளில் முதலீடு செய்யும் நிதியாகச் செயல்பட்டு ஷரியா அறநெறிகளுக்கு இணக்கமுடைய மூலதனப் பங்குகளில் முதலீடு செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும். ஷரியா அறநெறிகளுக்கு இணக்கமான முதலீடுகளைக் கொண்டிருக்கும் நிறுவன மூலதனப் பங்குகளை கீழிருந்து மேல் செல்லும் அணுகுமுறையில் தேர்ந்தெடுத்து ஒரு முதலீடு தொகுப்பை உருவாக்கி வளர்க்கும். புகையிலை, மது, சூதாட்டம், லாட்டரி, வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் என்று ஒழுக்கக் குறையுள்ளவையாக வகைப்படுத்தப்பட்ட நிறுவன பங்குகளில் இத்திட்டம் முதலீடு செய்யாது.

## ஷரியா முதலீடுகள்

**ஷரியா என்றால் என்ன?**

இஸ்லாம் சமய அறநெறிகளும் சமய விதிகளும் ஷரியா என்று அறியப்படுகின்றன. சமயச்சார்பற்ற சட்டங்கள் அறிவிக்கும் பலவற்றை, குற்றம், அரசியல் மற்றும் பொருளாதாரம், கூடவே சுகாதாரம், உணவு முறை, இறை வணக்கம், நோன்பு போன்ற தனிமனித விஷயங்கள் உள்ளிட்ட பல பிரிவுகளை ஷரியா எடுத்துக் கூறுகிறது. ஷரியா கோட்பாடுகள்படி, பொதுமக்கள் தேவை, வர்த்தக நடுநிலைமை, நேர்மையுடன் ஈட்டப்படும் வருவாய் போன்ற குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகள் அடிப்படையில் முதலீடுகள் செய்யப்பட வேண்டும்.

**ஷரியா அறநெறிகளுக்கு இணக்கமான முதலீடுகளின் தனிச்சிறப்புகள்:**

**துறை சார்ந்த வடிகட்டிகள்:**

**இவற்றுடன் சம்பந்தப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் ஷரியா அறநெறிகளில் ஒதுக்கப்படுகின்றன:**

- மது, புகையிலை
- வட்டி செலுத்துதல் மற்றும் வசூலித்தல் நடவடிக்கைகளையுடைய வங்கியியல் சார்ந்த நிறுவனங்கள்
- வேட்டை/சூதாட்டம்/காசினோ/அதிர்ஷ்ட விளையாட்டுகள்
- ஹலால் செய்யப்படாத உணவுப் பொருள்கள்
- இழிபொருள் இலக்கியம் அல்லது பாலியல் சார்ந்த கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள்

**நிதியியல் விகித அடிப்படையுள்ள வடிகட்டிகள்**

- அதிக கடன் பொறுப்புகளைப் புத்தகத்தில் காட்டும் நிறுவனங்கள் வடிகட்டப்படும்
- வட்டி வருவாய் போன்ற ஷார்ரியா நெறிகளுக்கு ஒவ்வாத நடவடிக்கை வருவாய் விகிதம் கொண்டிருக்கும் நிறுவனங்கள் ஒதுக்கப்படும்
- ரொக்கம், வரவேண்டிய தொகைகள், முதலீடுகள் மற்றும் கடனளவுகள் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் இருக்க வேண்டும்

## டாடா எதிக்கல் நிதித் திட்டத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

**ஷரியா நெறிகளுடன் இணங்கியிருக்கும் பன்முக பங்கு ஆவணங்கள்**

- 29 துறைகளில் சுமார் 200 நிறுவன மூலதனப் பங்குகளிலிருந்து ஷரியா நெறிகளுடன் இணங்கியுள்ள பன்முக பங்கு ஆவணத் தொகுப்பு
- நிறுவன சந்தை மதிப்புகளால் முதலீட்டு முடிவுகள் பாதிக்கப்படாது
- கீழிலிருந்து மேல் செல்லும் அணுகுமுறையில் பங்கு ஆவணங்கள் தேர்ந்தெடுக்கப்படும்

**குறைந்த நெம்புதிறனுடன் அடிப்படை பலமான நிறுவன மூலதனப் பங்கு தொகுப்பு**

- நிறுவன மூலதனத்தில் 30%க்கும் குறைவான பங்கு வட்டி செலுத்தப்படும் கடன்களைக் கொண்டிருக்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யப்படும்
- இந்த நிறுவனங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு வெளியிலிருந்து பெரிய அளவில் கடன் வளங்கள் தேவைப்படுவதில்லை - நிறுவன நடவடிக்கைகள் அதிக ரொக்கத்தைச் சம்பாதிக்கும் திறன் பெற்றிருக்கும்
- நடப்பு சந்தைகள் நிலவரத்தால் பாதிக்கப்படாமல், பணச்சந்தை நிலவரத்தையும் சார்ந்திராமல் இவ்வகை நிறுவனங்களின் வளர்ச்சி வாய்ப்புகள் நன்றாக இருக்கும்

**பலமான அடிப்படையுள்ள நிறுவனங்களின் தொகுப்பு**

இவ்வகை தனிச்சிறப்பு பெற்றுள்ள நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து தொகுத்தல்:

- அதிக ரொக்க வருவாய் கொண்டிருப்பவை
- உயர் மூலதன திறன் விகிதம்
- சிறந்த வருமானம் மற்றும் எதிர்கால வளர்ச்சி

**ஷரியா அறநெறி இணக்கத்தில் கண்டிப்பு**

- பட்சம் சாராத ஆலோசகர்கள் போர்ட்ஃபோலியோவை கண்ணும் கருத்துமாகக் கவனித்து முதலீடுகள் ஷரியா அறநெறிகளுடன் இணங்கியிருப்பதை உறுதி செய்வார்கள்
- குறிப்பிட்ட கால வரம்பிற்குள் விதிவிலக்குகள், ஏதாவது இருந்தால், சரி செய்யப்படும்
- தடை செய்யப்பட்ட வருவாய்களை புனிதமாக்கும் நடைமுறைகள் அமலில் இருக்கும்

## யாரெல்லாம் இதில் முதலீடு செய்யலாம், ஏன்?

- ஷரியா அறநெறியுடன் இணக்கமுள்ள மூலதனப் பங்குகள் மற்றும் பங்கு சார்ந்த ஆவணங்களில் முதலீடு செய்ய விரும்புபவர்கள்
- சமூக பொறுப்புகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களில் நேர்மையான வர்த்தகம் என்று கருதப்படும் நிறுவனங்களில் முதலீடு செய்தல்
- நெம்புதிறன் குறைந்த ஆனால் பலமான அடிப்படையுள்ள நிறுவனங்களில் விரும்பி முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள்
- நீண்ட காலவரையில் சொத்து மதிப்பு பெருக்கத்தை குறி வைத்து 3 வருடம் அல்லது அதற்கும் மேலான காலவரையில் மிதமானதிலிருந்து தீவிர அபாயங்களை எதிர்கொள்ள தயாராக இருக்கும் பங்கு சந்தை முதலீட்டாளர்கள்

*வினியோகிப்பவர்கள்:*

'TMF' என 57575 க்கு SMS செய்க. இணையதளம்: www.tatamutualfund.com
கூப்பிடுங்கள்: 1800-209-0101 (ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூட)
Follow us on
www.facebook.com/tatamutualfund